# சுதேசமித்திரன்

நமக்கு தொழில் நாட்டுக்கு உழைத்தல்: இமைபொழுதும் சோராதிருத்தல்.



## யாருக்கு என் வாக்கு

## சாட்டை வீச தயாராகுவோம்

மக்களாட்சி எதனை நோக்கி?

## தற்கொலை வேண்டாம்

சக்கரம் 1 ஆரம் 12 ஏப்ரல் 2016

# யாருக்கு என் வாக்கு?

கார். அகிலன்

"நீ அரசியலை விட்டு விலகி நிற்கிறாய் என்றால், உன்னைவிட கீழோரால் ஆளப்படுவாய்" என்கிறார் கிரேக்க அரசியல் மேதை பிளாட்டோ. இது அரசியல்வாதிகளுக்கு மட்டும் பொருந்துவது அல்ல, அரசியல்வாதிகளைத் தெரிவு செய்யும் பொதுமக்களுக்கும் பொருந்தும்.

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் சில தேவைகளை நான் முன்வைக்கிறேன். அத்தேவைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளிக்கும் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு எனது வாக்கு.

**குடிநீர்:**

மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று குடிநீர். அதை இப்பொழுது புட்டிகளில் நிறைத்து பணத்திற்கு விற்கிறது அரசு. விவசாயத்திற்கு நீர் ஏற்பாடு செய்யமுடியாத அரசு, கேளிக்கை நிகழ்வுகளுக்கு மட்டுமே பயன்படும், உடல் நலத்தைக் கெடுக்கும், கழிவறையை தூய்மை செய்யும் பூச்சிகொல்லிகளாம் மென்பானங்களைத் தயாரிக்கும் ஆலைகளை அமைக்க இடமும், எவ்வளவு வேண்டுமானாலும் எங்களது விவசாயிகளின் குருதியை உறிந்து எடுத்துகொள் என்ற அனுமதியையும் வழங்குகிறது அரசு.

அரை லிட்டர் மென்பானம் தயாரிக்க 170 முதல் 310 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. குடலுக்கும் உடலுக்கும் நன்மை தரும் இளநீரை விற்க இந்த அரசுகள் உதவாது. மாறாக தென்னை மரங்களை விளைவிக்க உதவும் நீரை உறிந்து தனியார் நிறுவனங்களுக்கு விற்றுவிடும்.

ஒரு புறம் மென்பானங்களுக்கு அனுமதி அளித்துவிட்டு மறுபுறம் உயிர்கொல்லி மதுவை விற்பதிலும் முன்னோடியாக விளங்குகிறது தமிழக அரசு. மதுவிற்கு பின்னால் உள்ள அரசியல் இக்கால இளைஞர்களை எழவிடாமல் செய்யும் திட்டம்தான். மதுவில்லையேல் மனிதன் சிந்திப்பான், சிந்தித்தால் கேள்வி கேட்பான், கேள்வி கேட்டல் புரட்சி வெடிக்கும், மக்கள் ஒன்றிணைவர், ஒன்றிணைந்தால் அரசியல்வாதிகள் பிழைப்பது எப்படி? எனவே மதுவை ஒழித்து, மென்பானங்களை ஒழித்து, இளநீர் மற்றும் பனைநுங்கு போன்றவற்றை அரசே விற்க அல்லது விவசாயிகளுக்கு உதவ முன்வரும் அரசியல் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு எனது வாக்கு.

**கல்வி மற்றும் மருத்துவம்:**

அடிப்படை தேவைகளில் மிகவும் முகன்மையானது கல்வியும் சுகாதாரமான வாழ்வும். ஒரு நாட்டின் வளர்ச்சியை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் கணக்கிடக் கூடாது என்பது என் கருத்து. அனைத்து அடிப்படை தேவைகளும் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் இருக்கும் நாடே மகிழ்ச்சியான நாடு. மக்களின் மகிழ்ச்சியைக்கொண்டே நாட்டின் வளர்ச்சியை தீர்மானிக்க வேண்டும். ஆக அடிப்படை தேவைகளான தரமான கல்வியும் மருத்துவமும் இலவசமாக்கப்படுதல் வேண்டும். கல்வியும் உடல்நலமும்தான் எதிர்காலத்தை தீர்மானிக்கும், இன்று இலவசமாகக் கிடைக்கும் கிரைண்டரும், மிக்சியும், தொலைக்காட்சி பெட்டியும் அல்ல என்பதையும் இலவசங்கள் மக்களை ஏமாற்றும் செயல் என்பதையும் பெரும்பாலானவர்கள் புரிந்துகொண்டுள்ளனர். மக்கள் நலனில் உண்மையிலேயே அக்கறை இருந்தால் சமமான கல்வியும் மருத்துவமும் கொடுங்கள். கொடுப்போம் என்பவருக்கு எனது வாக்கு.

**வேளாண்மை:**

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்." என்கிறார் வள்ளுவர்.

ஆனால் உழுதுண்டவரெல்லாம் பழுதுண்டு வாழ்கின்றனர். உணவுப் பஞ்சம் என்ற பெயரில் நவீன வேளாண்மையை அறிமுகப்படுத்தினர். செயற்கை வேதி உரங்களை மண்ணில் புதைத்தனர். உடனடி பதிப்புகளை அது ஏற்படுத்திடவில்லை. ஆனால் இன்று மண் வளம் குன்றி விவசாயம் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. விதைகள் எல்லாம் தனியாரிடம் வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அவர்கள் சொல்வதைத்தான் நாம் விளைவிக்க முடியும். இந்நிலையை மாற்றி, பாரம்பரிய நெல் வகைகள் எல்லாம் வெள்ளத்திலும் கடும் வரட்சியின்போதும் விளையக்கூடியனவாய் இருந்தன. ஆனால் இன்றிருக்கும் நெல்வகைகளுக்கு அதிகம் நீர் தேவைப்படுகிறது. வெயிலைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மேலும் பூச்சிக்கொல்லிகள் தெளிக்கப்படும் காய்கறிகள். கத்தரிக்காய் விளைவிப்பவரைக் கேட்டுப்பாருங்கள் தெரியும், அவர்களே அதை உண்ண மாட்டார்கள். எனவே, இயற்கை வேளான் முறைகளை ஆதரிக்கும் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு எனது வாக்கு.

ஆக, அனைவருக்கும் சமமான தரமான கல்வி, மருத்துவம், குடிநீர் மற்றும் இயற்கை முறை வேளாண்மையை நடைமுறைப் படுத்த நினைக்கும் கட்சிக்கு/வேட்பாளருக்கு எனது வாக்கு.

# சாட்டை வீச தயாராகுவோம்

க. விசயகிருகுணன்

இன்னும் சில நாட்கள் சாட்டை வீசும் நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அடுத்த 5 ஆண்டுகள் நம்மை யார் முன்னிறுத்த போகிறார்கள் என்பதை நாம் முடிவு செய்யும் நேரம் வந்துகொண்டிருக்கிறது. அடுத்த 5 ஆண்டுகள் யார் நம்மை இந்த உலகத்தின் ஓட்டத்தில் முன்னிறுத்தி கொண்டு போக போகிறார்கள் என்பதை முடிவு செய்யும் தருணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

நம் தமிழகம் பன்முக கலாச்சாரங்களையும் பல மக்களையும் ஒருங்கே கொண்ட மாநிலம். தென்னிந்தியாவின் பிற மாநிலங்களை ஒப்பிடுகையில் தமிழகம் கலாச்சாரத்தில் பன்முகத்தன்மை கொண்ட ஒரு மாநிலம். இங்கு தென்னிந்தியாவின் பல கலாச்சாரங்களின் பன்முகத்தன்மை தமிழகத்தில் பரவி கிடக்கிறது. இந்த பன்முகத்தன்மையை மையப்படுத்திய அரசியலே இங்கு பெரும்பாலும் ஆட்சியை பிடிக்க உதவியிருக்கிறது. இருந்தாலும் இந்த முறை பலகட்சிகள் மேடை ஏறியிருக்கின்றன, திராவிட அரசியல் பேசும் கட்சிகள் ஒரு புறம், தமிழன் என்று குறல் கொடுக்கும் கட்சிகள் ஒரு புறம் என்று தமிழக அரசியல் மிக்க பரபரப்பாய் ஓடிக்கொண்டிருக்கிறது. இன்னும் 30 நாட்களில் தெரிந்துவிடும் யார் நம்மை ஆளப்போகிறார்கள் என்று.

வழக்கம் போல அடுத்த 5 ஆண்டுகள் ஆட்சியை பிடிக்க என்னவெல்லாம் கொடுக்க வேண்டும் என்று பல அரசியல் கட்சிகளும் திட்டங்களை தீட்டி வாக்குறுதிகளை வீச துவங்கிவிட்டனர். அவர்களின் முக்கிய இலக்கு பாமர மக்கள். பாமர மக்கள் என்பது வேறு யாரும் அல்ல தினம் தினம் போராட்டத்துடன் வாழ்க்கையை வாழ்பவர்கள். அவர்களுக்காக திட்டம் செயல்படுத்தபடுகிறதோ இல்லையோ, அவர்களுக்கு கொடுக்கப்படும் வாக்குறுதிகளே பெரும்பாலும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்தி என்பது அரசியல் அறிந்த அனைவருக்கும் தெரியும்.

இந்த முறை களத்தில் இறங்கியுள்ள அனைத்து கட்சிகளும் முன்னிறுத்தியிருக்கும் முக்கிய அறிவிப்பு மதுவிலக்கு. இதனை பற்றி பேசும் அனைத்து கட்சிகளுமே பழமை வாய்ந்த கட்சிகளே, இத்தனை ஆண்டுகள் இவர்கள் ஒன்றோடொன்று இணைந்தே ஆட்சி புரிந்திந்திருக்கிரார்கள், அப்படி இருக்கும் பொழுது திடீரென்று அனைத்து கட்சிகளும் மதுவிலக்கை முன்னிறுத்த காரணம் என்ன? உண்மையிலேயே மதுவிலக்கு சாத்தியமா?

பக்கத்து மாநிலத்தில் தமிழகத்தை விட விலை குறைவாக மது விற்பனை நடக்கையில் இது சாத்தியமா? . இருந்தாலும் இதனை முன்னிறுத்த காரணம் என்ன?

அடுத்தது வேலை வாய்ப்பு, இது நம் மாநில பிரச்சனை மட்டும் அல்ல, இது பல நாடுகளின் பிரச்சனை. நம் மாநிலத்தில் ஆண்டுக்கு 5 லட்சம் பேர் கல்லூரி படிப்பை முடித்து வெளிவருகின்றனர், அவர்களில் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கிறது என்று புள்ளி விவரத்தை கணக்கிட்டால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள அளவு வித்தியாசப்படும். ஆட்சிக்கு வரும் அனைவரும் பல வருடமாக சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதியை முன் வைக்கின்றனர். இதில் எந்த அளவு சாத்தியம் உள்ளது, அனைவராலும் சுயவேலைவாய்பை சரியாக பயன்படுத்திக்கொள்ள முடியுமா? அல்லது அனைவருக்கும் சுயவேலைவாய்ப்பு சாத்தியமா? இருந்தாலும் இதனை முன்னிறுத்த காரணம் என்ன?

அடுத்த இலக்கு விவசாயம், ஊருக்கே சோறு போடும் விவசாயியும் , விவசாயமும் இந்த நவீன உலகத்தில் கண்டுகொள்ள படாமலே உள்ளது. விவசாயம் என்பது ஏதோ படிப்பறிவில்லாதவர்கள் செய்யும் தொழில் போல ஒரு சாரபினரும், தான் படும் கஷ்டத்தை தன் பிள்ளைகள் படகூடாது என்று சென்ற தலைமுறையும் எண்ணியதன் விளைவு பெரும்பாலான மக்கள் விவசாயத்தை கைவிடும் நிலையை கொண்டு வந்தது. இதில் யாரை குறை சொல்வது? மண்ணிலிருந்து எடுக்கும் எரிபொருளுக்கு விலை நிர்ணயிக்கும் உரிமையை கொடுத்துள்ள அரசு, மண்ணை பொன்னாக்கி உலகுக்கே படியளக்கும் விவசாயிக்கு விளைவிக்கும் உரிமையை மட்டுமே கொடுத்துள்ளது, விலை வைக்கும் உரிமையை கொடுக்கவில்லை. இது தான் விவசாயத்தின் வீழ்ச்சி, நிச்சயம் விவசாயம் அழிய போவத்தில்லை ஆனால் அது பன்னாட்டு நிறுவனங்களின் கைகளில் சென்று சேராத வரை சராசரி மக்களுக்கு நல்லது. இப்படி பட்ட சூழ்நிலையில் அனைத்து கட்சிகளின் வாக்குறுதிகளிலும் விவசாயம் முன்னிலை படுத்த காரணம் என்ன?

அடுத்தது கல்வி ,உண்மையில் சொல்ல போனால் விவசாயத்திற்கு இணையாக அனைத்து மக்களையும் வாட்டி வதைக்கும் கல்வி விலை முறை. இலவசமாக தர வேண்டிய கல்வி விற்பனைக்கு வந்ததிலிருந்து, கல்வி அறிவை வளர்ப்பதற்கான வழி என்று மாறி, அது ஒரு மோகப்பொருள் போல மாறிவிட்டது. நாளை ஒருவேளை விவசாயம் இவர்கள் கைகளிள் சிக்கினால் கல்விக்கு நேர்ந்த கதிதான் விவசாயத்திற்கும். இப்படி மோகப்போருளாக்கி விற்பனை செய்யப்படும் கல்வி தரத்திலாவது போட்டி போடும் அளவு உள்ளதா என்று கேட்டால் அதற்கு பதில் இங்கு பலரிடம் இல்லை. இப்பொழுது கல்வியை வைத்து

கொடுக்கப்படும் வாக்குறுதிகள் தரம் உயர்த்தப்படும், விலை கட்டுக்குள் வைக்கப்படும்(இலவசம் இல்லை), இனி கல்வியை தனியாரிடமிருந்து வாங்கி அரசுடமையக்குவது பெரும் பணி, அது இப்போதைக்கு சாத்தியம் இல்லை. இருந்தாலும் இது போன்ற வாக்குறுதிகளை முன்னிறுத்த காரணம் என்ன?

இன்னும் சில வாக்குறுதிகள் பல ஆட்சிகள் மாறினாலும் மாறாமல் கொடுக்கபடுவது பெண்களுக்கான இட ஒதுக்கீடு, சிறுபான்மையினர் இட ஒதுக்கீடு, இன்னும் பல. ஒரு நல்ல முன்னேற்றம் இந்த முறை இலவச அரசியல் அவ்வளவாக இல்லை. இலவசங்கள் தேர்தல் வாக்குறுதிகளில் இடம் பெற கூடாது என்று உயர்நீதிமன்றம் வைத்த குட்டு, இலவச அரசியலை குறைத்திருக்கிறது, ஆனால் தள்ளுபடி அரசியல் இன்னும் உள்ளது, கல்வி கடன் தள்ளுபடி, விவசாயக்கடன் தள்ளுபடி , இன்னும் சில வங்கி கடன் தள்ளுபடிகள்.

நன்கு ஆராய்ந்து பார்த்தால் இந்த தேர்தல் ஒரு நல்ல மாற்றத்திற்கான ஆரம்பம். தகவல் தொழில்நுட்பம் விரல் நுனியில் வளர்ந்துவிட்ட இந்த நவீன உலகத்தில் எந்த ஒரு தகவலும் வெகு விரைவில் உலகின் கடைகோடிக்கும் சென்று சேர்ந்துவிடுகிறது. இதை எளிதில் கையாளும் இளைஞர்களே இவர்களின் முக்கிய இலக்கு. மதுவிலக்கு, விவசாயம், கல்வி, வேலை வாய்ப்பு , பெண்கள் முன்னேற்றம் இதை பற்றிய விழிப்புணர்வு முந்தைய காலகட்டத்தை விட இப்பொழுது நன்கு வளர்ந்துவிட்டது. இன்று சமூக வலைத்தளங்கள் மூலமாக இவர்களின் முந்தைய வாக்குறுதிகள் என்ன , அவற்றில் செயல்படுத்தியது என்ன , செயல்படுத்தாமல் விட்டது என்ன என்று இன்று அதிகம் பகிரப்படுகிறது. இந்த செய்திகளை நம்மை சுற்றி இருப்போருக்கும் அறியபடுத்தினால் நல்ல ஒரு மாற்றத்திற்கு நாமே வழிகோளுதலாக இருக்கும்.

வரும் தேர்தலில் புதிதாக 1 கோடி பேர் முதல் முறையாக வாக்களிக்க உள்ளனர். இது மொத்த வாக்காளர்களில் 20% மேல், இவர்களை கவரும் ஒரு அரசியல் தலைவர் நிச்சயம் அடுத்த தலைமுறை அரசியலை வழங்கியாக வேண்டும். தலைவன் எவ்வழியோ தொண்டன் அவ்வழி இது அரசியல் மொழி. தலைவன் இருக்கட்டும் நாம் நல்ல தொண்டனை தேர்ந்தெடுப்போம். தன் தொகுதி மக்களுக்கு என்ன வேண்டும் என்று அறிந்து செய்பவனே நல்ல தொண்டன். நாம் நல்ல தொண்டனை தேர்ந்தெடுப்போம், தொண்டர்கள் நல்ல தலைவனை முடிவு செய்யட்டும்.

மே 16 , அனைவரும் வாக்களித்து நல்ல அரசியல் மாற்றத்திற்கு வழிவகை செய்வோம்.

# தற்கொலை வேண்டாம்!

ச.லோகமீனாட்சி

அழு!
கோபப்படு!
ஆத்திரப்படு!

அத்தனையும்
செய்து முடித்த பின்
ஆரம்பத்திலிருந்து யோசி,

எப்படி எதிர் கொள்வதென!
வாழ்வைக் கண்டு
எந்நிலையிலும் அஞ்சாதே!

தாங்க முடியா துயரம் நிலையில்லை
தற்கொலை நாடாதே!

பிறப்பின் சூட்சமம்
வாழ்ந்து பார்ப்பதில் தான்!

அவமானமாய்க் கருதும் எதையும்
எவருமே கடந்து வராமலில்லை!

உன் சுவாசம் தானாய்
நிற்கும் வரை
இறப்பைச் சிந்திக்காதே!

காதல் தோல்வி
வாழ்வில் விரக்தி
கண்டுகொள்ளா தனிமை
மீள முடியா துரோகம்

இதனையும் மீண்டு வென்றோர் பலருண்டு!

மீண்டு வா வாழ்வை அர்த்தப்படுத்துவோம்!

தொடர்ந்து பயனிப்போம் தன்நம்பிக்கையுடன்.

# மக்களாட்சி எதனை நோக்கி?

முதனை உ. சுந்தரமூர்த்தி

மக்களாட்சி என்பது, மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மாமன்றம், நீர்த்து போய்விடுமோ, இயங்கு தன்மையை இழந்துவிடுமோ என்ற ஆதங்கம் வரத்தான் செய்கிறது.

அரசியல் ஒரு சாக்கடை என்றால் அதை யார் தான் தூய்மை செய்வது? என்று பேரறிஞர் சி. அண்ணாதுரை சொன்னதை நினைத்து பார்த்தால் சாக்கடையைப் பூக்கடையாக மாற்றிக்காட்ட முடியும்.

இன்றைய அரசியல் சமூக நோக்கோடு பயணிக்கிறதா என்றால். இல்லை என்றுதான் சொல்வேன். பொது வாழ்க்கை என்றும், சேவை மனப்பான்மை என்றும் வார்த்தை சாலங்களே வட்டமடிக்கின்றன. பொதுவாழ்வில், அவர்களுக்கான புது வாழ்வியல் ஆரம்பித்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

மதிப்பிற்குரிய அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது சாலச்சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். நீ அரிசி எடுத்துவா, நான் உம்மி கொண்டுவருகிறேன், இரண்டு பெரும் ஊதி ஊதி சாப்பிடலாம் என்ற கதையாகத்தான் இருக்கிறது.

அரசியல் கூடாரம் முதல் போட்டு, வட்டியும் அசலும் பெரும் கந்து வட்டிக் காரனையும் மிஞ்சும் அளவிற்கு தொழிலாக மாறிவிட்டதோ என்று அச்சப்பட வைக்கிறது.

எதற்கு விண்ணப்பித்தாலும், கல்வியை ஒரு தகுதியாக வைத்தவர்கள், அரசியலுக்கு அந்த தகுதியை நிர்ணயிக்கவில்லை. ஏன் தெரியுமா? பாமரனும், பாராளுமன்றம், சட்டமன்றம், பஞ்சாயத்து உறுப்பனராகி மக்கள் தேவைகளை நிறைவேற்றுவான் என்பதற்காக.

எந்த உயரிய நோக்கோடு உருவாக்கப்பட்டதோ அதன் வழித்தடம் மாறி உள்ளளது. ரவுடி, சாராய வியாபாரி, அதிகார வர்க்கம், சாதிய வர்க்கம், ஆணவ வர்க்கம் என்று நடைபோடும் காலமாகி விட்டது, கொண்டுவந்ததன் நோக்கம் “காலமாகி” விட்டது.

ராஜ்ய சபையில், நியாமான உறுப்பினர்கள் யார் இருக்க வேண்டும் என்ற நியதி கடைப்பிடிக்கப்படுகிறதா என்றால், இல்லை. வேட்பாளர் ஆனது முதல் வெற்றி பெறும்வரை மக்களாட்சி பேசும் அரசியல் அரங்கம், வெற்றி பெற்றதும் மக்களையே மறந்துபோய்விடும் போது, மக்களாட்சி எங்கே சென்றது?

மக்களாட்சி மலரவேண்டும் என்ற எண்ணம் வரும்போதெல்லாம், பண்டைய கால மன்னராட்சி மறைமுகமாக வருகிறதோ என்று வருத்தமடைய செய்கிறது.

மக்கள், மக்கள் நலன் காத்தால் மட்டுமே மக்களாட்சி என்பது சரியாக பொருந்தும். சட்டம் தான் கடமையைச் செய்யும் என்று சொல்லிவிட்டு, சட்டத்தில் எங்கே தப்புவதற்கு "ஓட்டை" இருக்கிறது என்று பார்ப்பவர் மக்களாட்சிக்கான பிரதிநிதி அல்ல, பினாமிகளுக்கு விடைகொடுத்தாலே மக்களாட்சி மக்களுக்குச் சென்றடையும்.

எம்போன்ற இளைஞர்கள் தயாராகவே இருக்கிறோம். இந்த சமூகம் நலம்பெற வேண்டும், வளம் காண வேண்டும், அதற்கான எங்களின் சமூக பங்களிப்பு எப்போதும் ஒளிவு மறைவின்றி இருக்கும். மக்களாட்சி மலரட்டும்.

## நான் பங்கேற்கும் தேர்தல்

சுந்தரமூர்த்தி

ஓட்டு என்பது உன்னோட உரிமைதான்
உத்தமன தேர்வு செய்த உனக்கு அது பெருமைதான்
ஓட்டு இருப்பதாலே வருவார்கள் பலரும்தான்
ஓட்டு வாங்கும் வரை தருவார்கள் வணக்கம்தான்
பீரோட வருவாங்க பிரியாணி தருவாங்க
செயிச்ச பிறகு நன்றிகூட சொல்ல வரமாட்டங்க

போன போக்குல கொடுத்திடாத வாக்குதான்
நல்லவர தேர்வு செய்ய வாய்ப்பு இது உனக்குத்தான்
வருவார் பாருங்க நல்ல பணத்தோட ஜோராதான்
ஜோக்கா வருகும் போது போதையோட உனக்குத்தான்

சிரிச்சி வருவாங்க சிந்திக்கவும் சொல்வாங்க
சிந்தாமல் சிதறாமல் ஓட்டு போடுனு சொல்வாங்க
உனக்கும் எனக்கும் வணக்கம் சொல்லுவாங்க
கார்ல போகும் போது நோட்டிஸ் தருவாங்க

முதியோர் பென்சன் உயர்வு முத்தங்கூட கொடுப்பாங்க
ஓட்டுகேட்டு வருபொழுது பேருகூட வைப்பாங்க

எல்லாமே வேஷந்தான் ஏமாந்தா மோசம்தான்
ஓட்டு போடும் வரை உம்மேலயே பாசம்தான்.

## காதல் செய்வோம்

பா.பத்மலோசினி

அன்பினை அளவின்றி அள்ளி
வழங்கிடும் அன்னையை
காதல் செய்வோம்!!

பண்பினை பாங்குடன்
புகட்டிடும் தந்தையை
காதல் செய்வோம்!!

பாசத்தையும், பகிர்ந்துண்ணும்
எண்ணத்தையும் வளர்த்த அண்ணனை
காதல் செய்வோம்!!

பிரிவென்ற சொல்லின் அர்த்தத்தை
புரியவைத்த அக்காளை
காதல் செய்வோம்!!

நாட்கள் நகர்ந்தாலும், வருடங்கள் கடந்தாலும்
வஞ்சகமின்றி வாழ்த்தும் உறவுகளை
காதல் செய்வோம்!!

வாழ்கைக்கு வித்திட்டு,
வழியினை வகுத்திட்ட ஆசிரியரை
காதல் செய்வோம்!!

பாரமென்று எண்ணாது,பலநாட்கள்
நம்மைத் தாங்கும் பூமியை
காதல் செய்வோம்!!

தேர்வில் தோற்றாலும், மனம் சோராதபடி
நம்மைத் தேற்றும்,நட்பினை
காதல் செய்வோம்!!

காதல் செய்வதற்கு கடிவாளமும் இல்லை,
காதல் செய்வது குற்றமும் இல்லை,
ஆனால்,

“எச்சூழலிலும் அன்னை, தந்தையரின்
காதலுக்கு முற்றுபுள்ளியை
காண்பித்து விடக்கூடாது
என்ற எண்ணத்தையும்
காதல் செய்வோம்”!!

## சமூக இயக்கங்களின் கடந்தமாத பணிகள்

**நிழல்:** **மரங்களின் தோழர்கள்,** அமைப்பின் சார்பாக மார்ச் 27-ஆம் நாள் சென்னை அடையார் பகுதியில் இருக்கும் மரங்களில் அறையப்பட்டிருந்த ஆணிகள் மற்றும் விளம்பரப் பதாகைகளை நீக்கும் பணி நடந்தது.

**துவக்கம்:** அறுபத்துமூவர் திருவிழா நிறைவுற்ற பிறகு மயிலாப்பூர் வீதிகள் தோறும் கிடந்த குப்பைகளை அகற்றும் பணிகளை துவக்கம் அமைப்பினர் செய்தனர்.

**அறப்போர்:** லோக் ஆயுக்தா பயனத்தின் ஒரு கட்டமாக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிடமும் லோக் ஆயுக்தா சட்டத்திற்கு ஆதரவு கேட்கும் பணியை அறப்போர் இயக்கம் துவங்கி உள்ளது. தமிழகத்தில் இருக்கும் சில நேர்மையான அரசியல்வாதிகளில் ஒருவரான திரு.நல்லக்கண்ணு ஐயா அவர்களிடம் இருந்து இந்த பயணம் துவங்கியுள்ளது. அரசியல்வாதிகள் தலையீடு இல்லாத வலுவான லோக்ஆயுக்தா சட்டத்திற்கு எனது முழு ஆதரவு உண்டு என்று அவர் தெரிவித்தார். அவரிடம் அறப்போர் இயக்கத்தின் மாதிரி லோக்ஆயுக்தா வரைவு கொடுக்கப்பட்டது.

**The Weekend Agriculturist:** பூச்சிகொல்லிகளின் அதீத பயன்பாட்டால் இன்று நம் நிலம்,நீர் நஞ்சாக மாறியதுடன் தாய்பால் வரை நஞ்சு பரவி விட்டது.சிட்டுக்குருவிகள் தொடங்கி சிலந்தி ,தட்டான் என பறவைகளும் பூச்சிகளும் அழிவு நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றன.மகசூலை மட்டும் கணக்கில் கொண்டு அடிக்கப்படும் அதீத பூச்சிகொல்லியினால் ஏற்படும் பாதிப்புகளை சரிவர அறிந்து கொள்வதில்லை.இதன் குறித்தான தீவிரமான விழிப்புணர்வை விவசாயிகள் மத்தியிலும், நுகர்வோர்களிடமும் எடுத்து செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. அதன் ஒரு பகுதியாக திருச்சி திண்டுக்கல் சாலையில் அமைந்துள்ள அய்யலூர் கிராமத்தில் விவசாயிகள் சந்திப்பு நடைபெற்றது.

தங்களது மேலான கருத்துகளுக்கும் பங்களிப்பிற்கும் தொடர்புகொள்ளுங்கள்.

**emagz@thozhan.org & 8122195591**